செய்தி வெளியீடு எண் : 211 நாள் : 01.02.2023

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (1.02.2023) வேலூர் விஐடி பல்கலைக்கழகத்தில், முத்தமிழறிஞர் கலைஞர் மு. கருணாநிதி மாணவர் விடுதி மற்றும் பேர்ல் ஆராய்ச்சிக் கட்டடத்தை திறந்து வைத்து ஆற்றிய உரை.**

விஐடி பல்கலைக்கழகம் முத்தமிழறிஞர் கலைஞர் மாணவர் விடுதி மற்றும் பேர்ல் ஆராய்ச்சிக் கட்டட திறப்பு விழா நிகழ்ச்சியில் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கி அமர்ந்திருக்கக்கூடிய மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர் அருமை அண்ணன் துரைமுருகன் அவர்களே,

மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி அவர்களே,

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திரு. ஆர். காந்தி அவர்களே,

நாடாளுமன்ற உறுப்பினர்கள்

டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் அவர்களே,

திரு. கதிர்ஆனந்த் அவர்களே,

சட்டமன்ற உறுப்பினர்கள்

திரு.ஏ.பி. நந்தகுமார் அவர்களே,

திரு. ப. கார்த்திகேயன் அவர்களே,

திருமதி வி. அமுலு விஜயன் அவர்களே,

திரு. ஈஸ்வரப்பன் அவர்களே,

திரு. முனிரத்தினம் அவர்களே,

புதுவையைச் சார்ந்த திரு.செந்தில்குமார் அவர்களே,

வேலூர் மாநகராட்சி மேயர் திருமதி சுஜாதா ஆனந்தகுமார் அவர்களே,

துவக்கத்தில் அனைவரையும் வரவேற்று மகிழ்ந்திருக்கக்கூடிய விஐடி பல்கலைக்கழக வேந்தர் பெருமதிப்பிற்குரிய முனைவர் கோ. விசுவநாதன் அவர்களே,

வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.பெ.குமாரவேல் பாண்டியன், இ.ஆ.ப., அவர்களே,

விஐடி பல்கலைகழகத்தின் துணைத் தலைவர்கள்

திரு. சங்கர் விசுவநாதன் அவர்களே,

முனைவர் சேகர் விசுவநாதன் அவர்களே,

திரு. ஜி.வி. செல்வம் அவர்களே,

துணை வேந்தர் முனைவர் ராம்பாபு கோடாலி அவர்களே,

இணை துணை வேந்தர் முனைவர் பார்த்தசாரதி மல்லிக் அவர்களே,

நம்முடைய வேந்தர் விசுவநாதன் குடும்பத்தைச் சார்ந்திருக்கக்கூடிய சகோதர, சகோதரிகளே,

உள்ளாட்சி அமைப்புக்களை சார்ந்திருக்கக்கூடிய பிரதிநிதிகளே,

பத்திரிகை மற்றும் ஊடகத்துறையைச் சார்ந்த தோழர்களே,

என் பேரன்புக்குரிய விஐடி பல்கலைக்கழக பேராசிரியர் பெருமக்களே,

அன்புக்குரிய மாணவச் செல்வங்களே,

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

வீரத்தின் விளைநிலமாக விளங்கிக் கொண்டிருக்கக்கூடிய வேலூரை கல்வியின் விளைநிலமாக மாற்றியவர் நம்முடைய வேந்தர் விசுவநாதன் அவர்கள். இன்றைக்கு இந்தியாவில் மட்டுமல்ல - உலகளவில் கல்வியில் சிறந்த நிறுவனமாக வி.ஐ.டி.யை விசுவநாதன் அவர்கள் மாற்றிக் காட்டி இருக்கிறார்கள். இந்தப் புகழ்பெற்ற கல்வி நிறுவனத்தில் மாணவர் விடுதி ஒன்றை அமைத்து அதற்கு முத்தமிழறிஞர் கலைஞர் மு.கருணாநிதி மாணவர் விடுதி என்று பெயர் சூட்டி இருப்பது உள்ளபடியே பெருமைக்குரிய ஒன்று. தலைவர் கலைஞருடைய பெயரைச் சூட்டியதற்காக முதலமைச்சராக மட்டுமல்ல, அவருடைய மகன் என்ற முறையில் நான்

என்னுடைய நன்றியை, வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்கு வேண்டுமானால் அவர் வேந்தர் விசுவநாதன் என்று அழைக்கப்படலாம். எங்களுக்கெல்லாம் அவர் வேலூர் விசுவநாதன்தான். ஏனென்றால், திராவிட இயக்கத்தினுடைய தூண்களில் ஒருவராக இந்தப் பகுதியில் இருந்தவர், இருந்துகொண்டிருக்கக்கூடியவர், இருக்கப் போகக்கூடியவர். அதில் எந்த மாற்றமும் கிடையாது. வேண்டுமானால், அரசியலை விட்டு கொஞ்ச ஒதுங்கி இருக்கலாம். நான் அண்ணன் துரைமுருகன் அவர்களைப் போன்று வெளிப்படையாக எதுவும் பேசத் தயாராக இல்லை, பேசவும் மாட்டேன். ஆனால் பேசினாலும் அண்ணன் விசுவநாதன் அவர்கள் கோபித்துக் கொள்ள மாட்டார். ஏனென்றால் அவரே பேசுகிறபோது, அடையாளம் காட்டி விட்டார். அதையெல்லாம் மேற்கோள் காட்டி அவர் உரையாற்றியிருக்கிறார், வெளிப்படையாக, எதையும் மனதில் வைத்துக் கொள்ளாமல் அவர் பேசிய அந்தப் பேச்சுக்களை எல்லாம் நீங்களும் கேட்டீர்கள், நானும் கேட்டேன்.

கால்சட்டைப் பருவம் முதல் தந்தை பெரியாருடைய கொள்கையால் ஈர்க்கப்பட்டு - பேரறிஞர் அண்ணாவின் எழுத்துக்களால் செதுக்கப்பட்டவர் அவர். எஸ்.எஸ்.எல்.சி படித்த காலத்திலேயே தனது வகுப்பு மாணவர்களை அறிஞர் அணி, கலைஞர் அணி, நாவலர் அணி, நம் நாடு அணி என்று பெயரிடும் அளவுக்கு இளமையிலேயே திராவிடக் கொள்கையில் ஊறியிருந்தவர் நம்முடைய வேந்தர் அவர்கள். பி.ஏ. படிக்க லயோலா கல்லூரில் சேர்ந்த அவருக்கு நம்முடைய மதிப்பிற்குரிய திரு. முரசொலி செல்வம் அவர்களோடு ஏற்பட்ட நட்பைப் பற்றி அவரே எடுத்துச் சொன்னார். அவர்தான் விசுவநாதன் அவர்களை கலைஞரிடத்திலே அழைத்து வந்து அறிமுகப்படுத்திய அந்த காட்சிகளை எல்லாம் அவரே எடுத்துச் சொன்னார். அதேபோல் மேடையிலே இருக்கக்கூடிய அண்ணன்

துரைமுருகன் அவர்களின் நட்புக்கூட எப்படி கிடைத்தது என்பதை பற்றி அவரும் சொன்னார். அண்ணன் துரைமுருகன் அவர்களும் எடுத்துச் சொன்னார். பேரறிஞர் அண்ணா அவர்களை சந்திக்க சென்ற போது அண்ணன் துரைமுருகன் அவர்கள் விசுவநாதன் அவர்களையும் அழைத்து சென்றார். அந்த காலத்தில் திராவிட முன்னேற்றக் கழக ஆதரவு மாணவர்கள் செயல்படுவதற்காக, திராவிட மாணவர் முன்னேற்றக் கழகம் என்ற அமைப்பு அப்போது இருந்தது.

அப்போதெல்லாம் என்.எஸ்.கே உடைய பாட்டு உங்களுக்கு இப்போதும் நினைவு இருக்கும் என்று நினைக்கிறேன். இப்போகூட சமயத்தில் சோசியல் மீடியாவில், யூ டியூப்-ல் போனால் பார்க்கலாம். தீனா மூனா கானா என்று ஒரே பாட்டே உண்டு. அதைத்தான் தீனா மூனா மானா காரங்க என்று அந்தக் காலத்து மாணவர்கள் சொல்லிக் கொள்வார்கள். அதில் ஒருவராக இருந்தவர்தான் நம்முடைய விசுவநாதன் அவர்கள். திமுகவின் செயல்வீரராக அவர் வளர்ந்தார். நாடாளுமன்றத்துக்கு போட்டியிட்டார்.

தலைவர் கலைஞர் அவர்களை அழைத்துக்கொண்டு வந்து காகிதப்பூ என்ற ஒரு பிரச்சார நாடகத்தை நடத்தி அந்த வரலாற்று நிகழ்ச்சிகளையெல்லாம் அவர் இங்கே சுட்டிக்காட்டினார். இன்னும் பெருமையாக சொல்ல வேண்டுமென்றால், 26 வயதில் ஒருவர் நாடாளுமன்ற உறுப்பினர் ஆனார் என்றால், அது நம்முடைய வேந்தர் விசுவநாதன் அவர்கள் தான். இந்தியாவிலேயே ஒரு இளம் வயதில் எம்.பி. ஆக அவ அந்தப் பொறுப்பை ஏற்றார். அதில் இருந்து அவருக்கு ஏறுமுகம்தான்.

இப்போது நம்மோடு இருக்கிறார். உண்மையிலேயே அது எனக்கு மட்டுமல்ல, இங்கு இருக்கக்கூடியவர்களுக்கு எல்லாம், உங்களுக்கெல்லாம் அது பெருமையாகத்தான் இருக்கிறது.

வேலூரில் 1984-ஆம் ஆண்டு 180 மாணவர்களுடன் மிகச் சிறிய அளவில் இந்தக் கல்லூரி தொடங்கப்பட்டது. இன்றைக்கு வி.ஐ.டி. பல்கலைக்கழகமாக இது வளர்ந்திருக்கிறது. மூன்று மாநிலங்களில் நான்கு கல்வி வளாகங்களை வைத்திருக்கிறார். சுமார் 80 ஆயிரம் மாணவர்கள் படிக்கிறார்கள். இந்தியாவில் முதல் 20 பல்கலைக்கழகங்களில் ஒன்றாக வி.ஐ.டி இன்றைக்கு வளர்ந்திருக்கிறது. 60 நாடுகளைச் சேர்ந்த மாணவர்கள் இந்தக் கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆசிய தரவரிசைப் பட்டியலில், உலகப் பல்கலைக்கழகத் தரவரிசையில் வி.ஐ.டி இடம்பெற்றிருக்கிறது.

கல்லூரிகளை உருவாக்குவது மிகவும் சுலபம், அது எளிது. ஆனால் அதனைத் தலைசிறந்ததாக வளர்த்தெடுப்பதுதான் மிகமிக கடினம். அந்தக் கடினமான பணியைத் தனிக்கவனம் செலுத்தி அதை செய்து முடித்திருக்கிறார். இந்தியக் குடியரசுத் தலைவரால் வழங்கப்படக்கூடிய விருதின் தரவரிசைப் பட்டியலில் வி.ஐ.டி நிறுவனமானது சுயநிதிப் பல்கலைக்கழகப் பட்டியலில் முதலிடத்தில் இன்றைக்கு இருக்கிறது. அரசியலிலும் இருந்து - கல்லூரியையும் சேர்த்து நடத்தியிருந்தால் இந்த வெற்றி கிடைத்திருக்குமா என்பது சந்தேகம்தான். இதனை வேந்தர் அவர்கள் நிச்சயம் ஒப்புக் கொள்வார்.

இன்னொரு முக்கியக் காரணம் - வேந்தர் விசுவநாதனுடைய வாரிசுகள், எல்லோரும் சொன்னார்களே,

* சங்கர்

* சேகர்

* செல்வம்

ஆகியோரும் அப்பாவைப் போலவே செயல்பட்டடிருக்கிறார்கள். ஆனால் அரசியலில் செயல்பட்டிருந்தால், வாரிசு என்று சொல்லிவிடுவார்கள். ஆனால் கல்லூரிகளில் அல்லது வேறு ஏதாவது தொழில்களில் இருந்தால் அந்த விமர்சனம் வருவதற்கு வாய்ப்பு இல்லை. அப்பாவுக்குத் தப்பாது பிறந்த பிள்ளைகளாக இந்தக் கல்வி சாம்ராஜ்யத்தை கண்காணித்த காரணத்தால்தான் இந்த மாபெரும் வெற்றி கிடைத்திருக்கிறது.

சமீபத்தில்கூட நம்முடைய சகோதரர் செல்வம் அவர்கள் சென்னையில் வி.ஏ.எஸ் என்ற சர்வதேச பள்ளியை மாண்புமிகு இந்திய குடியரசுத் துணைத் தலைவராக இருந்த மதிப்பிற்குரிய வெங்கையா நாயுடு அவர்களை வைத்து திறந்து வைத்தார். அதற்கு எனக்கு அழைப்பு அனுப்பியிருந்தார். நானும் வாழ்த்துச் செய்தியை அவருக்கு அனுப்பி வைத்திருந்தேன். இப்படி எல்லா இடத்திலும் வழிவழியாக வரக்கூடிய தலைமுறை சரியாக இருந்தால் வெற்றி நிச்சயம் என்பதற்கு இந்த விஐடி - யே ஒரு சாட்சியாக, ஒரு உதாரணமாக அமைந்திருக்கிறது.

இதில் முக்கியமாக ஒன்று சொல்ல வேண்டும். நம்முடைய வேந்தர் விசுவநாதன் அவர்கள் கல்விப் பணிகளோடு சேர்த்து தமிழ்ப் பணி ஆற்றுவதையும் அவர் கைவிடவில்லை. அதுதான் எனக்கு மிக மிகப் பிடித்த ஒன்று. உலகத் தமிழ் அமைப்பாக தமிழியக்கத்தை நடத்தி வருகிறார். இது மிக மிக முக்கியமான ஒன்று. தந்தை பெரியாரும் பேரறிஞர் அண்ணாவும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும் உள்ளே இருந்து அவரை இயக்கிக் கொண்டு இருக்கிறார்கள் என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு.

தமிழ் பெயரைத்தான் வைக்க வேண்டும் என்று அவர் தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டிருக்கிறார். அதைத்தான் நான் சீர்திருத்த திருமண

நிகழ்ச்சிக்கு செல்கிறபோது இதைத்தான் நான் தொடர்ந்து சொல்லிக்கொண்டு வருகிறேன். அந்த மணமக்களுக்கு நான் சொல்கிற ஒரு அறிவுரை என்னவென்று கேட்டீர்களானால், உங்களுக்கு பிறக்கின்ற குழந்தைகளுக்கு அழகான தமிழ் பெயரை வையுங்கள்.

ஏனென்றால், தமிழைப் பற்றி தலைவர் கலைஞர் அவர்கள் அடிக்கடி எடுத்துச் சொல்வார்கள்.

உளங்கவர் ஓவியமே!
உற்சாக காவியமே!
ஓடை நறுமலரே!
ஒளியெனும் புதுமலரே!
அன்பே! அமுதே! அழகே!
உயிரே! இன்பமே!
இனிய தென்றலே!
பனியே! கனியே!
பழரசச் சுவையே!
மரகத மணியே!
மாணிக்கச்சுடரே!
மன்பதை விளக்கே!

என்றெல்லாம் தமிழை அழைக்கத் தோன்றுகிறது. இருந்தாலும், தமிழைத் தமிழே என்று அழைக்கக்கூடிய சுகம் வேறு எதிலும் கிடையாது என்று அடிக்கடி எடுத்துச் சொல்வார். அப்படிப்பட்ட இந்த அழகு தமிழ் மொழியில் பெயர் சூட்டுங்கள் என்று நானும் தொடர்ந்து சொல்லி வருகிறேன்.

இன்றைக்கு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பெயரால் ஆண்கள் விடுதியை நான் இன்றைக்கு திறந்து வைத்திருக்கிறேன். அதோடு,

80 கோடி ரூபாய் மதிப்பில் 1,371 மாணவர்கள் தங்கி படிக்கக்கூடிய வகையில் இந்த விடுதி கட்டப்பட்டுள்ளது.

அதேபோல் PEARL ஆராய்ச்சி பூங்காவையும் திறந்து வைத்துள்ளேன். 157 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இது கட்டப்பட்டுள்ளது. 69 ஆய்வகங்கள் இதில் இடம்பெற்றுள்ளன. ஆராய்ச்சிக் கல்விக்கு ஒரு தலைசிறந்த மையமாக இது அமையப் போகிறது.

தமிழ்நாட்டு இளைஞர்கள் கல்வியில், அறிவில், சிந்தனைத் திறத்தில், தனித்த ஆற்றல்களில் தலைசிறந்த ஆளுமைகளாக வளருவதற்கு இது போன்ற ஆராய்ச்சிப் பூங்காக்களும், கல்லூரிகளும், விடுதிகளும் ஏராளமாக நமக்குத் தேவைப்படுகிறது.

அவற்றை உருவாக்குகின்ற அரசாக நமது திராவிட மாடல் அரசு இன்றைக்கு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

திராவிட மாடல் என்றால் சில விளக்கங்களை நம்முடைய திரு.பொன்முடி அவர்கள் இங்கே குறிப்பிட்டுச் சொன்னார்கள். ஆக திராவிட மாடல் என்றால்

அனைத்துத் துறை வளர்ச்சி -

அனைத்து மாவட்ட வளர்ச்சி -

அனைத்து சமூக வளர்ச்சி

- என்ற அடிப்படையில் இந்தியாவுக்கே வழிகாட்டக்கூடிய வகையில் ஒரு ஆட்சி நடந்து கொண்டிருக்கிறது. இதனை அறிந்து பல்வேறு தொழில் நிறுவனங்கள் தமிழ்நாட்டில் முதலீடு செய்வதற்கும் - புதிய தொழில் நிறுவனங்களைத் தொடங்குவதற்கும் தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறார்கள்.

இப்படி உருவாக்கக்கூடிய தொழில்களின் திறனுக்கேற்ற வல்லுநர்களை உருவாக்க வேண்டிய கடமை இந்த அரசுக்கு இருக்கிறது.

அதனால்தான் திரு. பொன்முடி அவர்கள் சொன்னது போல, கடந்த மார்ச் 1 ஆம் தேதி என்னுடைய பிறந்தநாள் அன்று அரசின் சார்பில் ஒரு திட்டத்தை நான் அறிவித்தேன். அதுதான் நான் முதல்வன் என்ற அந்தத் திட்டம்.

இந்தத் திட்டத்தை இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கக்கூடிய உலக நிறுவனங்கள் பலவும் இன்றைக்கு பாராட்டிக் கொண்டிருக்கிறது. நேற்றைய தினம் உயர்கல்வித் துறையினுடைய செயலாளர் திரு. சஞ்சய் மூர்த்தி அவர்கள் தமிழ்நாட்டிற்கு வந்திருந்தபோது இந்தத் திட்டத்தைப்பற்றி மனதார பாராட்டிப் பேசியிருக்கிறார்.

அதேபோல தான் புதுமைப் பெண் என்ற ஒரு புரட்சிகரமான திட்டத்தை செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம். உயர்கல்வி கற்க வரக்கூடிய அரசுப் பள்ளி மாணவர்களுக்கு இந்தத் திட்டத்தின் மூலமாக மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கக்கூடிய அந்தத் திட்டத்தையும் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம்.

இந்த புதுமைப் பெண் திட்டத்தின் மூலமாக நான் புள்ளிவிபரத்தோடு சொல்லவேண்டும் என்று சொன்னால்,

இராணிப்பேட்டை மாவட்டத்தில் மட்டும் 1730 மாணவியர்களும்,

திருப்பத்தூர் மாவட்டத்தில் 889 மாணவியர்களும்,

திருவண்ணாமலை மாவட்டத்தில் 5697 மாணவியர்களும்,

வேலூர் மாவட்டத்தில் 4110 மாணவியர்களும் பயனடைந்து வருகிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

பள்ளிகளில் இடையில் நின்று விடக்கூடிய மாணவராக இருந்தாலும் - கல்லூரிப் படிப்பைத் தொடர முடியாத மாணவராக இருந்தாலும் -

அவர்களது படிப்பை மீண்டும் தொடர அனைத்துத் தூண்டுதல்களையும் நம்முடைய திராவிட மாடல் அரசு செய்து வருகிறது.

அந்த வகையில் தமிழ்நாட்டில் மாபெரும் கல்விப் புரட்சி இன்றைக்கு நடந்து கொண்டிருக்கிறது. அது மென்மேலும் வளர்ச்சி பெற தனியாருடைய பங்களிப்பும் அவசியம் தேவைப்படுகிறது. அதற்கு வி.ஐ.டி போன்ற கல்வி நிறுவனங்கள் நிச்சயமாக அரசுக்குத் துணைநிற்கும் என்ற நம்பிக்கை எனக்கு நிரம்ப இருக்கிறது.

நான் தொடர்ந்து சொல்லிக் கொண்டிருப்பது பெருந்தலைவர் காமராஜர் ஆட்சியில், பள்ளிக் கல்வியும், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞருடைய ஆட்சிக் காலத்தில், கல்லூரிக் கல்வியும், முன்னேற்றம் அடைந்தது. நம்முடைய ஆட்சியில் உயர்கல்வியையும் தாண்டி, ஆராய்ச்சிப் படிப்புகளும் சிறந்து விளங்க வேண்டும் என்பதுதான் நம்முடைய திராவிட மாடல் ஆட்சியினுடைய இலட்சியமாக இருக்கிறது.

என்னுடைய எண்ணத்திற்குச் செயல் வடிவம் கொடுக்க இந்த வி.ஐ.டி பல்கலைக் கழகம் உறுதுணையாக இருக்கும் என்று நான் மனதார நம்புகிறேன்.

சென்னை எப்படி மெடிக்கல் கேபிடல் என்று போற்றப்படுகிறதோ, அதேபோல், வேலூர் மாநகரம், இங்கு அமைந்துள்ள வி.ஐ.டி. பல்கலைக் கழகத்தின் முயற்சியால், Capital of Research Studies என்ற வகையில் வளரும்.

மீண்டும் சொல்கிறேன். கல்விதான் யாராலும் திருட முடியாத சொத்து. அதனால் அந்த சொத்தை நீங்கள் அடையக்கூடாது என்று பலரும் பல கட்டுக் கதைகளை சொல்வார்கள். Face Book, Whatsapp மட்டுமல்ல, பத்திரிகைகளில் கட்டுரைகள் கூட வெளியிடுவார்கள். அவர்களால் படிக்காமல் முன்னேறிய சிலரைத்தான் காட்டமுடியும்.

அதற்காக படித்து முன்னேறிய பலரை மறைத்துவிட முடியாது. நீங்கள் படியுங்கள், நிறைய படியுங்கள், படித்து உலக அரங்கில் தமிழ்நாட்டு மாணவர்கள் உயர்ந்த பதவியில் இருக்கிறதுதான் உங்கள் பெற்றோருக்கும், உங்களுக்கும் பெருமை, எனக்கும் பெருமை, இந்த தமிழ்நாட்டிற்கும் பெருமை. இந்த விஐடி - யில், தமிழ்நாட்டைச் சேர்ந்த மாணவர்கள் மட்டுமல்லாமல், பல்வேறு மாநில மாணவர்களும் படிக்கிறீர்கள். நீங்கள் எல்லாம் உயர்ந்த நிலையை அடைவதுதான் இந்தியாவிற்கே பெருமை, என்று கூறி என்னுடைய வாழ்த்துரையை இந்த அளவோடு நிறைவு செய்து கொண்டு என் உரையை நிறைவு செய்கிறேன்.

நன்றி, வணக்கம்

- - - - -

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in